# என்னுடைய சுகாதாரப் பராமரிப்பு உரிமைகள்

இது ஆஸ்திரேலிய சுகாதாரப் பராமரிப்பு உரிமைகளுக்கான சாசனத்தின் இரண்டாம் பதிப்பு.

ஆஸ்திரேலியாவில் சுகாதாரப் பராமரிப்பு வழங்கப்படும் அனைத்து இடங்களிலும் உள்ள எல்லா மக்களுக்கும் இந்த உரிமைகள் பொருந்தும்.

சுகாதாரப் பராமரிப்பு பெறும்போது நீங்களோ அல்லது நீங்கள் பராமரிக்கும் ஒருவரோ என்ன எதிர்பார்க்கலாம் என்பதை இந்த சாசனம் விளக்குகிறது.



## எனக்கு பின்வரும் உரிமைகள் உள்ளன:

### அணுகும் உரிமை

- என் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சுகாதாரப் பராமரிப்பு சேவைகள் மற்றும் சிகிச்சை

### பாதுகாப்பு

- தேசிய தரங்களைப் பூர்த்தி செய்யும் பாதுகாப்பான மற்றும் உயர்தரமான சுகாதாரப் பராமரிப்பைப் பெறுதல்
- நான் பாதுகாப்பாக இருப்பதாக உணரும் சூழலில் பராமரிக்கப்படுதல்

### மரியாதை

- ஒரு தனிநபராகவும், அத்துடன் கண்ணியத்துடனும் மற்றும் மரியாதையுடனும் நடத்தப்படுதல்
- என்னுடைய கலாச்சாரம், அடையாளம், நம்பிக்கைகள் மற்றும் விருப்பங்கள் அங்கீகரிக்கப்படுதல் மற்றும் மதிக்கப்படுதல்

### கூட்டாண்மை

- கேள்விகள் கேட்டல், அத்துடன் வெளிப்படையான மற்றும் நேர்மையான தகவல் தொடர்பு கொள்ளுதல்
- நான் தெரிவு செய்கின்ற அளவுக்கு மற்றும் என்னால் முடிகின்ற அளவுக்கு என்னுடைய சுகாதார பராமரிப்பு வழங்குநருடன் முடிவுகளை எடுத்தல்
- திட்டமிடுதலிலும், முடிவெடுத்தலிலும் நான் விரும்புவர்களைச் சேர்த்தல்

### தகவல்கள்

- என்னுடைய நிலைமையைப் பற்றியும், பல்வேறு சோதனைகள் மற்றும் சிகிச்சைகளினால் சாத்தியப்படும் நன்மைகள் மற்றும் அபாயங்கள் பற்றியுமான தகவல்களை எனக்குத் தெளிவுபடுத்துதல். அதனால் நான் கொடுக்கும் என் ஒப்புதலைத் தர முடியும்
- சேவைகள், காத்திருப்பு நேரங்கள் மற்றும் செலவுகளைப் பற்றிய தகவல்களைப் பெறுதல்
- உடல்நலம் குறித்த தகவல்களைப் புரிந்து கொள்ள மற்றும் பயன்படுத்த உதவி தேவைப்படும்போது ஆதரவளித்தல்
- என்னுடைய உடல்நலம் குறித்த தகவல்களைப் அணுகும் உரிமையைக் கோருதல்
- என்னுடைய சுகாதாரப் பராமரிப்பின்போது ஏதாவது தவறு நேர்ந்தால், அது எப்படி நடந்தது, அது எவ்வாறு என்னைப் பாதிக்கக்கூடும் மற்றும் பராமரிப்பைப் பாதுகாப்பாகச் செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பனவற்றைத் தெரிவித்தல்

### தனியுரிமை

- என்னுடைய சொந்தத் தனியுரிமை மதிக்கப்படுதல்
- என்னைப் பற்றியும், என் உடல்நிலை பற்றியுமான தகவல்கள் பாதுகாப்பாகவும், இரகசியமாகவும் வைத்திருத்தல்

### கருத்துகளைத் தெரிவித்தல்

- கருத்துக்களை வழங்குதல் அல்லது நான் சிகிச்சை பெறுவதைப் பாதிக்காத வகையில் புகாரளித்தல்
- என்னுடைய கவலைகளை வெளிப்படையான தன்மையிலும், சரியான நேரத்திலும் தீர்வு காணுதல்
- பராமரிப்பின் தரத்தையும், சுகாதாரச் சேவைகளையும் மேம்படுத்த என் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் பங்குபெறுதல்

ஜூலை 2019-இல் வெளியிடப்பட்டது

AUSTRALIAN COMMISSION ON SAFETY AND QUALITY IN HEALTH CARE

மேலதிக விவரங்களுக்கு ஊழியர்களிடம் கேட்கவும் அல்லது பின்வரும் இணையதளத்துக்குச் செல்லவும்
safetyandquality.gov.au/your-rights